JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-1 Witness
for Prosecution

| CC.No. | 284/2025 | Crime No. | | Station | Bhavani |
|---|---|---|---|---|---|

| | | |
|---|---|---|
| Name | Pw.1 கந்தசாமி | Village |
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 10.03.2026 | | |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் பொதியா மூப்பனூரில் குடியிருந்து கொண்டு, செங்கல் சூலையில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். முதலாம் எதிரி எனது அக்கா மகன். இரண்டாம் எதிரி எனது அக்கா ஆவார். தேதி நினைவில்லை. கடந்த 2025 ஆம் வருடம் 2வது மாதம் ஒரு நாள் மாலையில் நான் வீட்டில் இல்லாத பொழுது, எனது மனைவி மட்டும் இருந்த பொழுது எதிரி பழனிச்சாமி எனது வீட்டிற்கு வந்து, எனது மனைவியை தகாத வார்த்தைகளில் பேசியதாக எனது மனைவி எனக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தார். நான் வீட்டிற்கு வந்த பிறகு அவரிடம் கேட்பதாக எனது மனைவியிடம் கூறினேன். நான் வீட்டிற்கு வந்த பின்பு மாலை சுமார் 06.00 மணியளவில் எனக்கு சொந்தமான இடத்தில் குடியிருந்து வரும் எதிரி பழனிச்சாமியிடம் சென்று எதற்காக எனது மனைவியை தகாத வார்த்தைகளில் திட்டினாய் என்று கேட்டேன்.

அப்போது எனது அக்கா செல்வியும், உடனிருந்தார். உடனே பழனிச்சாமி என்னை பார்த்து நான் அப்படித்தான் கேட்பேன் என்று, என்னை தகாத வார்த்தைகளால் திட்டிவிட்டு எனது இரண்டு கைகளையும் முதுகுக்கு பின்னால் இழுத்து பிடித்துக் கொண்டார். அப்போது கீழே கிடந்த பெரிய வேப்பம்படியை எடுத்த எனதுஅக்கா எனது இடது கண்ணுக்கு கீழ் மற்றும் இடது கை பெருவிரல், மண்டையில் இடது பக்கம் ஆகிய இடங்களில் வேப்பந்தடியால் அடித்தார். அப்போது அந்த வழியாக ரோட்டில் வந்த பழனிச்சாமி, பாலசுப்பிரமணியம் இருவரும் சத்தம் கேட்டு அருகில் வந்த பொழுது பழனிச்சாமி, செல்வி இருவரும் தடியை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டார்கள். பிறகு எனது

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.10 18:28:42 +0530

மனைவியின் உதவியுடன் 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் தெரிவித்து ஆம்புலன்ஸ் வந்தவுடன் அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். எதிரிகள் என்னை மண்டையில் அடித்ததால் மண்டையில் சற்று எலும்பு முறிவு ஏற்பட்டது. அதில் தற்பொழுதும் வலி ஏற்படுகிறது. அதற்காக நான் தற்பொழுது வரை மாத்திரை எடுத்துக் கொண்டு வருகிறேன். அந்தியூர் அரசு மருத்துவமனைக்கு வந்த போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்கு மூலம் பதிவு செய்தார்கள்.

தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. நீதிமன்றத்தில் உள்ள தடியால் எதிரிகள் என்னை அடிக்கவில்லை. அந்த தடி இதைவிட மிகவும் பெரியதாக இருந்தது. வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 மற்றும் 2 ம் எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் அருள்குமார் ஆஜர். எதிரி தரப்பில் போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் சாட்சி குறுக்கு விசாரணை செய்யவில்லை. மாண்புமிகு உச்ச நீதிமன்ற வழிகாட்டுதலின்படி, எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:28:53 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-2 Witness
for Prosecution

| CC.No. | 284/2025 | Crime No. | | Station | Bhavani |
|---|---|---|---|---|---|

| | | |
|---|---|---|
| Name | **Pw.2 சுதா** | Village |
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 10.03.2026 | | |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் பொதியா மூப்பனூரில் குடியிருந்து கொண்டு, ஆடு மேய்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். 1ம் எதிரி எனது நாத்தனாரின் மகன் 2ம் எதிரி எனது நாத்தனார் ஆவார். அ.சா.1 எனது கணவர் ஆவார். தேதி, மாதம் நினைவில்லை.

கடந்த 6–7மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை சுமார் 4.00 மணியளவில் நான் எனது வீட்டிற்கு அருகில் உள்ள எனது ஆட்டுக்கட்டறையில் இருந்த பொழுது, அங்கு வந்து எதிரி பழனிசாமி என்னை தகாத வார்த்தைகளால் திட்டினார்.

பின்னர் நான் அதனை எனது கணவருக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தேன். பிறகு சிறிது நேரம் கழித்து எனது கணவர் வீட்டிற்கு வந்தார். மணி சரியாக ஞாபகம் இல்லை. சுமார் 01.45 மணி இருக்கும். அப்போது நம் வீட்டின் அருகில் இருந்த எதிரி பழனிசாமியிடம் எனது கணவர் எதற்காக பேசினாய் என்று கேட்டார்.

மேலும், எனது ஆட்டுக்குட்டி அவிழ்த்து விட்டதால், நான் அதை பிடிப்பதற்காக அருகில் சென்றேன். எனது கணவர் முதலில் எதிரி பழனிசாமியை அருகில் இருந்த தடியால் காலில் அடித்து விட்டார். பிறகு இருவருக்கும் சண்டை வந்துவிட்டது. பிறகு நடந்த விபரங்கள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:29:00 +0530

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன்**
**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை—**

மேற்படி சம்பவத்தன்று மாலை சுமார் 06.00 மணியளவில் எனது கணவர் வேலை முடித்து வீட்டிற்கு வந்ததாகவும், அப்போது எதிரிகள் செல்வியிடமும், பழனிச்சாமியிடமும் எனது கணவர் எதற்காக எனது மனைவியை தகாத வார்த்தைகளில் திட்டுனீர்கள் என்று கேட்டதாகவும், அதற்கு அவர்கள் இருவரும் அப்படிதாண்டா பேசுவோம் என்று கூறி, மீண்டும் எனது கணவரை தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், எதிரி பழனிச்சாமி எனது கணவரின் இரண்டு கைகளையும் முதுகுக்குப் பின்புறம் இழுத்துப் பிடித்துக் கொண்டதாகவும், எதிரி செல்வி அங்கிருந்த வேப்பந்தடியால் எனது கணவரின் இடது கன்னத்திலும், இரு கைகளிலும், தலையின் இடது பக்கமும் அடித்ததாகவும், எனது கணவருக்கு இரத்தம் வருவதைப் பார்த்து வேப்பங்குச்சியை அங்கேயே போட்டுவிட்டு எதிரிகள் இருவரும் சென்று விட்டதாகவும், பிறகு எனது கணவரை ஆம்புலன்ஸ் மூலமாக சிகிச்சைக்கு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றதாகவும், போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிகள் உறவினர்கள் என்பதாலும், எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:29:07 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-3 Witness
for Prosecution

| CC.No. | 284/2025 | Crime No. | | Station | Bhavani |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | **Pw.3 பழனிச்சாமி** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 10.03.2026 | | | |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் பொதியா மூப்பனூரில் குடியிருந்து கொண்டு, பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். அவர்கள் எனது உறவினர்கள் ஆவார்கள். எதிரி பழனிச்சாமி எனக்கு மைத்துனர் முறையாகிறார். அ.சா.1 மற்றும் அ.சா.2 இருவரையும் எனக்குத் தெரியும். அவர்களும் எனது உறவினர்கள். தேதி, மாதம் நினைவில்லை. கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் மாலையில் நானும், எனது மாமனார் பாலசுப்பிரமணி என்பவரும் அ.சா.1 ன் வீட்டின் வழியாக பைக்கில் சென்று கொண்டிருந்த பொழுது, அங்கு சத்தம் கேட்டது. அருகில் சென்று பார்த்த போது அ.சா.1 தரப்பினருக்கும், எதிரிகள் தரப்பினருக்கும் சண்டை நடந்து முடிந்திருந்தது. அந்த சண்டையை நான் நேரில் பார்க்கவில்லை. என்ன சண்டை என்றும் யார் யாரிடம் சண்டை இட்டார்கள் என்றும், எனக்கு சரியாக தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன்**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

கடந்த 22.02.2025 தேதியன்று மாலையில் நானும், சிவகுமார் என்பவரும்அ.சா.1 ன் வீட்டின் வழியாக சென்று கொண்டிருந்ததாகவும், அப்போது அன்றைய தினம் மாலை சுமார் 4.00 மணியளவில் ஆஜர் எதிரி பழனிச்சாமி அ.சா.2 சுதாவை தகாத வார்த்தைகளால் திட்டி விட்டதாகவும், அது குறித்து அ.சா.1, எதிரி பழனிச்சாமியிடம் மாலை 6.00

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:29:14 +0530

மணியளவில் கேட்டதாகவும், அதற்கு எதிரி பழனிச்சாமி அப்படித்தான் திட்டுவேன் என்று அ.சா.1ஐ தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், பின்னர் எதிரி செல்வி, பழனிச்சாமி அ.சா.1ன் இரண்டு கைகளையும், முதுகுக்குப் பின்னால் பிடித்துக் கொண்டதாகவும், எதிரி செல்வி அங்கிருந்த வேப்பந் தடையால் அ.சா.1ன் இரு கைகளிலும், இடது கன்னத்திலும், தலையிலும் அடித்ததாகவும் நாங்கள் வருவதை பார்த்த எதிரிகள் குச்சியை அங்கேயே போட்டுவிட்டு சென்றுவிட்டதாகவும், போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் உறவினர்கள் என்பதால் எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும், பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

**Signature of Witness**

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:29:21 +0530

Sd/– (J.RAJKUMAR)
**Judicial Magistrate No.1, Bhavani**

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-3 Witness
for Prosecution

| CC.No. | 284/2025 | Crime No. | | Station | Bhavani |
|---|---|---|---|---|---|

| | | |
|---|---|---|
| Name | **Pw.4பாலசுப்பிரமணி** | Village |
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 10.03.2026 | | |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் பொதியா மூப்பனூரில் குடியிருந்து கொண்டு, கூலி வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம் நினைவில்லை. கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் காலையில் நான் பொதியா மூப்பனூரில் உள்ள கந்தசாமியின் வீட்டின் அருகில் சென்ற போது இரண்டு நாட்களுக்கு முன்பு அங்கு கந்தசாமிக்கும், பழனிச்சாமி, செல்வி ஆகியோர்களுக்கும் இடையே நடைபெற்ற சண்டை குறித்து போலீசார் சண்டை நடைபெற்ற இடத்திற்கு வந்து, விசாரித்து படம்வரைந்து கொண்டிருந்தார்கள். சாட்சி கையொப்பம் போடும்படி கேட்டுக் கொண்டதால், நானும் பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்தேன். தற்போது, என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

மேற்படி, போலீசார் சம்பவ இடத்திலிருந்து ஒரு வேப்பங்குச்சியை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜரிலும் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. தற்போது, நீதிமன்றத்தில் உள்ள இந்த வேப்பங்குச்சியைத்தான் போலீசார் அன்று என் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார்கள். **வேப்பங்குச்சி அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.10 18:29:30 +0530

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்கிற விவரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான். மேற்படி கையொப்பத்தை நான் காவல் நிலையத்தில் வைத்து தான் செய்தேன் என்றால், சரியில்லை. சம்பவ இடத்தில் வைத்துதான் செய்தேன்.

**மறு விசாரணை இல்லை.**

**Signature of Witness**

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.10 18:29:37 +0530

Sd/– (J.RAJKUMAR)
**Judicial Magistrate No.1, Bhavani**